**வாக்குமூலம்**

**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**

**வழக்கு எண் : SC.No. 259/2022**

**வழக்கு சாட்சி PW-1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சேகனா | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | முகமது | தொழில் | : | உதவி ஆய்வாளர் |
| கிராமம் | : | தென்காசி | வயது | : | 59 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of December 15th, 2025.

**(1ம் எதிரி சிறையிலிருந்து காணொளி மூலம் ஆஜர்படுத்தப்பட்டார். 3, 4 எதிரிகள் ஆஜர்படுத்தப்படவில்லை. இதர எதிரிகள் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது தென்காசி நெடுஞ்சாலை ரோந்து பிரிவில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்னர் 2017ம் ஆண்டு தென்காசி காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது, 08.10.2017 அன்று நான் மற்றும் சார்பு ஆய்வாளர் சிலுவை அந்தோணி, காவலர்கள் முத்துமாரி, முத்துராமன், வடிவேல் முருகன், சத்யராகவேந்திரன் ஆகியோர்கள் தென்காசி பகுதியில் குற்றங்கள் நடவாமல் இருக்க தடுக்க வேண்டி, அன்றைய தினம் இரவு 02.45 மணிக்கு தென்காசி - ஆய்க்குடி ரோட்டிலுள்ள இரயில்வே கேட் அருகே வந்தபோது, இரயில்வே கேட்டிற்கு கிழக்கே 100 அடி தூரத்தில் ஒரு பாழடைந்த

கட்டடத்திற்கு முன்பு மறைவாக 2 பைக்குகள் நின்றிருந்ததை பார்த்தவுடன், அங்கு சென்று நாங்கள் பார்த்தபோது புதருக்குள் சில நபர்கள் தங்களுக்குள்ளாகவே பேசிக்கொள்ளும் சத்தம் கேட்டு அந்த பாழடைந்த கட்டிடம் சென்று அவர்கள் பேசுவதை கேட்டபோது, அவர்கள் தென்காசியிலுள்ள ஏதாவது ஒரு நகைக்கடையை உடைத்து திருட வேண்டும் என்று பேசிக்கொண்டிருந்தவர்களை போலீஸ் பார்ட்டிகளாகிய நாங்கள் அவர்களை மடக்கி பிடித்து விசாரிக்கையில் தங்களின் பெயர், முகவரியை மாற்றி, மாற்றி கூறினார்கள். என்னுடைய விசாரணையில் அவர்கள் (1). பால்தினகரன், ஊர்மேலழகியான், (2). வசந்தகுமார், கல்லிடைக்குறிச்சி, (3).மகேந்திரன், அயன்சிங்கம்பட்டி, (4). ராஜேஷ்கண்ணா, கல்லிடைக்குறிச்சி, (5).சேகர், இலஞ்சி, (6).ராஜா, இலஞ்சி எனத் தெரிய வந்தது.

அவர்கள் வைத்திருந்த 2 இருசக்கரவாகனங்களான TN-76-M-8325 & TN-76-2889 என்ற எண் கொண்ட வாகனங்களை சோதனை செய்து பார்த்தபோது, அதில் TN-76-M-8325 என்ற வாகனத்தின் டேங்க் கவரில் இரு மங்கி குல்லாக்கள், 2 கை உறைகள், இரண்டு மிளகாய் பொடி பாக்கெட்டுகள், ஒரு அரிவாள் இருந்தது. தரையில் ஒரு சிறிய பாறைக்கம்பியும், ஆணி பிடுங்கக்கூடிய மற்றொரு சிறிய கம்பியும் பைக்கிற்கு அருகே கீழே கிடந்தது. மேற்படி நபர்கள் அதிகாலையில் தென்காசியிலுள்ள ஒரு நகைக்கடையில் கள்ளக்களவு செய்ய வேண்டும் என்று சதித்திட்டம் தீட்டி ஆயத்தமாகி கொண்டிருந்த விபரம் எனக்கு தெரிய வந்தமையால் அவர்களையும், மேற்படி சொத்துக்களையும் நாங்கள் தக்க பாதுகாப்புடன் தென்காசி காவல்நிலையம் அதிகாலை 04.30 மணிக்கு கொண்டு வந்து அங்கு ஆஜரில் இருந்த ஆய்வாளர் அவர்களிடம் மேற்படி நபர்களையும் சொத்துக்களையும் ஒப்படைத்து,

அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி தனி அறிக்கை சமர்பித்தேன். அந்த தனி அறிக்கை அ.சா.ஆ.1 ஆகும்.

எனது தனி அறிக்கையின் பேரில் தென்காசி காவல்நிலைய குற்ற எண்.483/2017, சட்டப்பிரிவுகள் 120B, 399 IPC ன் படி வழக்கு பதிவு செய்ததை தெரிந்து கொண்டேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

(எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.)

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.12.18 21:38:54 +0530

**வாக்குமூலம்**

**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**

**வழக்கு எண் : SC.No. 259/2022**

**வழக்கு சாட்சி PW-2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முத்துராமன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | கருத்தப்பாண்டி | தொழில் | : | தலைமைக்காவலர் |
| கிராமம் | : | தென்காசி | வயது | : | 42 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of December 15th, 2025.

**(1ம் எதிரி சிறையிலிருந்து காணொளி மூலம் ஆஜர்படுத்தப்பட்டார். 3, 4 எதிரிகள் ஆஜர்படுத்தப்படவில்லை. இதர எதிரிகள் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது தென்காசி மாவட்ட குற்ற ஆவணக்காப்பகத்தில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன். 08.10.2017 அன்று நான் உதவி ஆய்வாளர் சேகனா, சார்பு ஆய்வாளர் சிலுவை அந்தோணி, காவலர்கள் முத்துமாரி, வடிவேல் முருகன், சத்யராகவேந்திரன் ஆகியோர்கள் தென்காசி பகுதியில் குற்றங்கள் நடவாமல் இருக்க தடுக்க வேண்டி, அன்றைய தினம் இரவு 02.45 மணிக்கு தென்காசி - ஆய்க்குடி ரோட்டிலுள்ள இரயில்வே கேட் அருகே வந்தபோது, இரயில்வே கேட்டிற்கு கிழக்கே 100 அடி தூரத்தில் ஒரு பாழடைந்த கட்டடத்திற்கு முன்பு மறைவாக 2 பைக்குகள் நின்றிருந்ததை பார்த்தவுடன், அங்கு சென்று நாங்கள் பார்த்தபோது புதருக்குள் சில நபர்கள் தங்களுக்குள்ளாகவே பேசிக்கொள்ளும் சத்தம்

கேட்டு அந்த பாழடைந்த கட்டிடம் சென்று அவர்கள் பேசுவதை கேட்டபோது, அவர்கள் தென்காசியிலுள்ள ஏதாவது ஒரு நகைக்கடையை உடைத்து திருட வேண்டும் என்று பேசிக்கொண்டிருந்தவர்களை போலீஸ் பார்ட்டிகளாகிய நாங்கள் அவர்களை மடக்கி பிடித்து விசாரிக்கையில் தங்களின் பெயர், முகவரியை மாற்றி, மாற்றி கூறினார்கள். உதவி ஆய்வாளர் விசாரணையில் அவர்கள் (1). பால்தினகரன், ஊர்மேலழகியான், (2). வசந்தகுமார், கல்லிடைக்குறிச்சி, (3).மகேந்திரன், அயன்சிங்கம்பட்டி, (4). ராஜேஷ்கண்ணா, கல்லிடைக்குறிச்சி, (5).சேகர், இலஞ்சி, (6).ராஜா, இலஞ்சி எனத் தெரிய வந்தது.

அவர்கள் வைத்திருந்த 2 இருசக்கரவாகனங்களான TN-76-M-8345 & TN-76-AC-2889 என்ற எண் கொண்ட வாகனங்களை சோதனை செய்து பார்த்தபோது, அதில் TN-76-M-8345 என்ற வாகனத்தின் டேங்க் கவரில் இரு மங்கி குல்லாக்கள், 2 கை உறைகள், இரண்டு மிளகாய் பொடி பாக்கெட்டுகள், ஒரு அரிவாள் இருந்தது. தரையில் ஒரு சிறிய பாறைக்கம்பியும், ஆணி பிடுங்கக்கூடிய மற்றொரு சிறிய கம்பியும் பைக்கிற்கு அருகே கீழே கிடந்தது. மேற்படி நபர்கள் அதிகாலையில் தென்காசியிலுள்ள ஒரு நகைக்கடையில் கள்ளக்களவு செய்ய வேண்டும் என்று சதித்திட்டம் தீட்டி ஆயத்தமாகி கொண்டிருந்த விபரம் எங்களுக்கு தெரிய வந்தமையால் அவர்களையும், மேற்படி சொத்துக்களையும் நாங்கள் தக்க பாதுகாப்புடன் தென்காசி காவல்நிலையம் அதிகாலை 04.30 மணிக்கு கொண்டு வந்து அங்கு ஆஜரில் இருந்த ஆய்வாளர் அவர்களிடம் மேற்படி நபர்களையும் சொத்துக்களையும் ஒப்படைத்து, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி உதவி ஆய்வாளர் தனி அறிக்கை சமர்பித்தார். மேற்படி எதிரிகளை கைது செய்ய

ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.12.18 21:39:04 +0530